# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

Case No : STC.586/2024 Date: 20.09.2025
Deposition of Witness for : பு.சா.1
Name : பாபு

**குறுக்கு விசாரணை :-**

1) இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் கால்நடைத்துறையில் ஓட்டுநராக 12 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். தற்போது, எனது மாத வருமானம் ரூ.55,000/-ம் ஆகும். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றும், எனது மாத வருமானம் என்ன என்றும் நான் எனது புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் என்னுடன் பணிபுரிந்தவர். எதிரியும், நானும் எந்த ஊரில் பணிபுரிந்தோம் என்றால் எடப்பாடி, சிலுவம்பாளையத்தில் பணிபுரிந்தார், நான் சங்ககிரியில் பணிபுரிந்தேன்.

2) எதிரியை எனக்கு 11 வருடங்களாக தெரியும். எதிரி என்னிடம் என்ன தேவைக்காக கடன் கேட்டார் என்றால் தனது மகனனின் தொழில் தேவைக்காகவும், பேத்தியின் திருமண தேவைக்காகவும், மனைவியின் மருத்துவ செலவிற்காகவும் கேட்டார். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள காசோலையை தவிர எதிரி கொடுத்த வேறு ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் ரூ.20/-மதிப்புள்ள முத்திரைத்தாள் ஒன்று, கடனுறுதி சீட்டு ஒன்று மற்றும் எதிரி பணம் கொடுப்பதாக கூறிய ஆடியோ பதிவுகள் உள்ளது. மேற்படி, கடனுறுதி சீட்டை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.12,00,000/-ம் தொகையை ரொக்கமாக தான் கொடுத்தேன். எதிரி என்னிடம் 22-07-2023 ம் வெற்று கையொப்பமிட்ட காசோலையையும், ரூ.20/-மதிப்புள்ள முத்திரைத்தாள் ஒன்று, கடனுறுதி சீட்டு ஒன்று ஆகியவற்றை கொடுத்தார். எதிரிக்கு நான் கடன் கொடுத்தபோது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் எனது மனைவி மட்டும் இருந்தார். நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.12,00,000/-ம் தொகையை எனக்கு எவ்வாறு வந்தது என்றால் எனது மனைவியின் நகைகள் அடகுவைத்ததின் மூலமாகவும், நான் வங்கியில் தனிநபர் கடன் பெற்றதன் மூலமாகவும், எனது மாமனாரின் சேமிப்பு பணம் மூலமாகவும் கிடைத்த தொகையை நான் எதிரிக்கு கொடுத்தேன்.

4) நான் வருமான வரி தாக்கல் செய்து வருகிறேனா என்றால் ஆமாம். வருமான வரி கணக்கில் நான் எதிரிக்கு கொடுத்த கடனை காட்டியுள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கு காசோலையில் உள்ள விவரங்களை யார் பூர்த்தி செய்தது என்றால் எதிரி வரும்போதே பூர்த்தி செய்து கொண்டு தான் வந்தார். நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டாரா என்றால் பெற்றுக்கொண்டார், அதன்பிறகு 15-11-2023 ம் தேதிக்குள் பணத்தை திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டார். 15-11-2023 ம் தேதியன்று காசோலையை மீண்டும் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை, பணம் தராததால் வழக்கறிஞர் மூலம் வழக்கு தாக்கல் செய்தேன்.

5) நான் எதிரியிடம் இருந்து வட்டி தொகை பெற்றேனா என்றால் இல்லை. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 15-11-2023 ம் தேதியன்று காசோலையை

மீண்டும் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. எனது புகாரில் 20-11-2023 ம் தேதியன்று காசோலையை மீண்டும் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தாக சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. எதிரி என்னிடம் 15-11-2023 ம் தேதி என்னை அணுகி காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யுமாறு கூறினார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

6) எதிரி என்னிடம் ரூ.12,00,000/-ம் தொகை வாங்கவில்லை என்றாலும், எதிரியின் காசோலையை தவறாக பயன்படுத்தி இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,<br>Judicial Magistrate No.1,<br>Sankari.

Sd/-Babu